# அருள்மிகு
# உலகாம்பிகை உடன்உறை
# திருப்பாலீஸ்வரர் கோயில்

திருப்பாலைவனம்

பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

## தல வரலாறு



*வெளியீடு :*

அருள்மிகு திருப்பாலீஸ்வரர் திருக்கோயில்

திருப்பாலைவனம்.

# திருப்பாலீசர் துணை

உதவிக் குறையின்றி வேறாருமில்லை யுமைபுதல்வா
மதவிக்ர வேழமுகமுடையீர்! வடமால் வரைக்கே
இதமிக்க பாரதங்கோட்டா லெழுதிய வென்னரசே!
கதவிற் கணபதியே பாலை மேவிய கற்பகமே!

முனிமலை மீதமர்ந்த பரஞ்சுடரைப்
பாரோர் வினைதீர்க்கும் பரம்பொருளைப்
பாம்பதனை யாரமெனப் பூண்டு நீதம்
பார்வதியை இடபாவில் வைத்துள்ளானை
விண்ணவரும் மண்ணவரும் தொழுதிடவே
பாங்குடனே பாலையுள் துதைந்திருந்துப்
பால் வண்ணத் திருமேணி தாங்கிய திருப்
பாலீசப் பெருமானைப் பாடுங்களே!

# திருப்பாலைவனத் தல வரலாறு
# தோற்றுவாய்
# திருச்சிற்றம்பலம்

"அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொகுமுத லுருவு கொண்(டு)
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்து வந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையோடு துதைந்திருத்தருளியும்"

**மாணிக்கவாசகர் :** கீர்த்தித் திருவகல் அடிகள் 92 –99

# திருப்பாலைவனம் - கோயில்

சான்றோர் பலர் நிறைந்த தொண்டை நன்னாட்டில் இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் பொன்னேரிக்கு வடகிழக்கே சுமார் 10கி.மீ. தொலைவில் திருப்பாலைவனம் அமைந்திருக்கிறது.

ரயில் வழியாகச் செல்வதானல் சென்னை – கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் பொன்னேரியில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் இவ்வூரையடையலாம்.

இவ்வூர் கோயில் மிகவும் பழமையானது. கி.பி. 11ம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. புராண வரலாறும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இக்கோயில் கிழக்கு நோக்கிய ஐந்து நிலைகள் உடைய கோபுரத்துடன் கூடிய அழகிய பெரிய நுழைவாயிலைக் கொண்டது.

கோயில் முகப்பில் பெரிய பதினாறு கால்களைக் கொண்ட 'மண்டபம்' உள்ளது. மண்டபத்துக்குக் கிழக்கில் கோயிலுக்கு எதிரில் 'அமிர்தபுஷ்கரணி' என்னும் பெயருடைய புனித நீர்க்குளம் உள்ளது.

கோயிலுக்கு உள்ளே நுழைந்து வலப்பக்கமாக சென்றால் கோயிலின் தென்மேற்கு மூலையில் விநாயகர் கோயில் உள்ளது.

விநாயகர் கோயிலுக்குத் தென்மேற்கில் கோயிலின் தெற்கு மூலையில் தலவிருட்சமான பாலை மரங்கள் பசுமையுடன் காணப்படுகின்றன.

கோயிலைச் சுற்றிக்கொண்டு உட்கோயிலுக்குச் செல்லுமுன் அழகிய முக மண்டபம் விளங்குவதைக் காணலாம்.

தெற்கு நோக்கிய நுழைவாயிலையுடைய உட்கோயிலின் உள்ளே சென்றால் முதலில் கண்ணுக்கு விருந்தாக அமைவது ஆடல்வல்லானின் அழகான திருவுருவம் அமைந்த அம்பலக் கோவிலாகும்.

ஆடவல்லானை வணங்கிப் பின் உள்ளே சென்றால் முகமண்டபம், அர்த்த மண்டபம் கருவரைகளோடு கூடிய அழகிய இறைவன் திருச்சந்நிதியடைந்து **பாலீஸ்வரப் பெருமானைக்** கண் குளிரக் கண்டு தரிசிக்கலாம்.

இறைவனின் சந்நிதிக்கு உள்ளே புகுமுன் வாயிலின் வலப்பக்கத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய விநாயகர் சிலையையும், இடப்பக்கத்தில் '**ஆலமர் செல்வன்**' என்று போற்றப்படுகின்ற சிற்ப நுணுக்கங்கள் நிறைந்த **தட்சிணாமூர்த்தி**யின் அழகுமிகு திருமேனியையும் கண்டு போற்றலாம்.

இறைவனின் கருவரை '**கஜபிருஷ்டம்**' என்று வடமொழியிலும், 'தூங்கானை மாடம்' என்று தமிழிலும் கூறப்படுகின்ற யானையின் முதுகு போன்ற அமைப்புடையதாகும். இவ்விமானம் பிரம்மரந்திரம் வரை கருங்கல்லாலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றது. அதற்குமேல் சிகரம் சுதையால் ஆனது.

தூங்கானை மாடத்தின் வெளிப்புறச் சுவரில் முழுவதுமாகக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கோஷ்டத்தில் தெற்கு நோக்கிய **விநாயகர், தட்சிணாமூர்த்தி** ஆகிய உருவங்களும், மேற்கு நோக்கிய பெரிய **மஹாவிஷ்ணு**வின் உருவமும் வடக்கு நோக்கிய **பிரமனின்,** உருவத்தையும், மகிஷனைக் காலில் மிதித்த வண்ணம் காட்சி தரும் **துர்கை**யின் அழகு நின்ற திருக்கோலத்தையும் காணலாம்.

உட்சுற்றில் (பிரகாரத்தில்) **அநுமார், நர்த்தன விநாயகர், சமய குரவர்கள், மார்க்கண்டேயர், வாசுகி வீர பத்திரர்**, அழகியதும் உயரமானதுமான இறைவனின் **பிட்சாண்டவர்** கோல உருவம், வள்ளி **தெய்வானையுடன் கூடிய முருகன், சண்டேசமூர்த்தி** வரை அனைவரையும் தரிசிக்கலாம்.

வெளி மண்டபத்தில் இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் **ஆறுமுக சுவாமி மயில்** மீது அமர்ந்து காட்சி தரும் திருக்கோயிலைக் கண்டு வழிபடலாம்.

அடுத்து **லோகாம்பிகை** சந்நிதி, இதுவும் முகமண்டபம் அர்த்த மண்டபம், கருவறைகளோடு கிழக்கு நோக்கி விளங்குகிறது.

இறைவனுக்கு உட்பிரகாரம் உள்ளது போலவே இறைவிக்கும் தனியாக உட்பிராகாரம் இருக்கிறது. இங்கு அம்பாள் இறைவனுக்கு வலப்பக்கத்தில் நின்ற வண்ணம் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

இவ்வாறு எழில் கொஞ்சும் இவ்வாலயம் ராஜேந்திர சோழ தேவரால் கட்டப்பட்டு திருபுவனச் சக்கரவர்த்தி வீரராஜேந்திர தேவர் (இராஜராஜசோழனின் பேரன் ராஜேந்திர சோழனின் மகன்) காலம் முதல் 18ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு மன்னர்களாலும் பக்தர்களாலும் திருப்பணிகளையும் திருவிழாக்களையும் கண்டு ஊரும் பேரும் சிறக்க விளங்கியிருந்தது எனலாம்.

பின்னர் இப்பெருங்கோயில் **பையூர் கோட்ட வேளாள மரபினரால்** இன்றுவரை நிர்வாகிக்கப்பட்டு சிறப்புடன் விளங்கி வருகிறது.

## இக்கோயில் பற்றிய புரானம் :

தேவர்களும் அசுரர்களும் மந்திரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலை அமுதம் வேண்டிக் கடைந்தனர் என்பது யாவரும் அறிந்த செய்தி.

அவ்வாறு அவர்கள் திருப்பாற்கடலைக் கடையும்போது ஐராவதம் என்னும் யானையும், 'தேவதாரு' எனப்படும் கற்பக விருட்சமும், முழுநிலவும், திருமகளும் தோன்றினார்கள். ஆலகால விஷமும் தோன்றி வெளிப்பட்டது.

உலகை உய்விக்க கருதி இறைவன் அவ்விஷத்தைத் தானுண்டு நஞ்சுண்ட கண்டன் (நீலகண்டன்) என்ற பெயர் பெற்றான்.

அதன் பின்பு அமுதம் தோன்றியது. அதை தேவாசுரர்கள் சமமாக ஏற்று உண்டு அமர வாழ்வு பெற வேண்டுமென்பது அவர்களின் உடன்படிக்கை. ஆனால் தேவர்கள் அசுரர்களை ஏமாற்றிவிட்டு அமுதத்தை எடுத்துக் கொண்டு மறைவான இடம் தேடி வந்து உண்டனர்.

உண்ணுவதற்கு முன்பு இறைவனைப் பூசித்துப் பின் உண்ண வேண்டுமென்று கருதிய தேவர்கள், தங்கள் கையில் இருந்த அமுதத்தில் ஒரு பகுதியைச் சிறு லிங்கமாகப் பிடித்து வைத்து வழிபாடு செய்துவிட்டுப் பின் உண்டனர்.

அவ்வாறு தேவர்கள் அன்று லிங்க வடிவில் அமுதத்தை பிடித்து வைத்து வணங்கிய இடமே திருப்பாலைவனம்.

அவர்கள் வழிப்பட்ட ஈசனே இன்று இங்கு கோயில் கொண்டுள்ள திருப்பாலீசப்பெருமான்ஆவார். இவருக்குவடமொழியில் **'அமிர்தேஸ்வரர்'** என்று பெயர் வழங்கப்படுகிறது. (அமிர்தம் ஈசர் –அமிர்தேசர்– அமிர்தத்தால் ஆன ஈசன் என்பது இதன் பொருள்)

## இக்கோயில் தோன்றிய வரலாறு :

முதல் ராஜேந்திர சோழ மன்னன் தன் பெரும் படையுடன் வடபுலம் சென்று வடதிசை மன்னர்களை வென்று கங்கை நீரைக்கொண்டு வருகையில இத்திருப்பாலைவனத்துப் பாலைமரக்காட்டில் பரிவாரங்களுடன் தங்கி இருந்தான். அப்போது ஒரு பாலை மரத்தில் கட்டப்பட்ட யானை திடீரென்று மயங்கி விழக்கண்ட மன்னன் மரத்தை வெட்டிச் சோதிக்ககட்டளையிட்டான்.

வீரர்கள் மரத்தை வெட்டுகையில் கோடாரி இறைவன் தலைப்பாகத்தில் பட குருதி வெளிப்பட்டது. இதைக்கண்ட மன்னன் மரத்தை பக்குவமாக அகழ்ந்து எடுக்க ஆணையிட்டான். மரம் அப்புறப்படுத்தப்பட்டது. இறைவனின் வெண்ணிற லிங்க வடிவம் மரத்தின் வேர்ப்பகுதியில் காட்சிதரக்கண்டு ஆனந்தம் கொண்டு மன்னன்

உடனே அவருக்கு ஆலயம் அமைத்து வழிபட்டான். இறைவிக்குக் கோயில் எழுப்பித் தனது அன்புக்குரிய தாயாரின் **'லோகமாதேவி'** என்ற பெயரைச் சூட்டி மகிழ்ச்சி கொண்டான். இவ்வாறு தோன்றியதுதான் இன்றைய திருப்பாலீசர் கோயில். (இறைவனின் திருமேனியில் கோடாரி பட்ட வடு இன்னமும் உள்ளது.)

## பிற செய்திகள் :

இவ்வூர் கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் 71. (1929 ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கைப்படி எண் 307 முதல் 377 வரை உள்ளவை திருப்பாலைவனம் பற்றியவை) தமிழ்–65, தெலுங்கு–3, வடமொழி– 2, கன்னடம் –1 ஆக 71. இன்று சிதைந்தவை போக மீதியிறுப்பவை தமிழ் சோழர் காலத்தவை–41, பாண்டியர் காலத்தவை–3, நெல்லூர்ப் பகுதியாண்ட சோழர்க்கடங்கிய சிற்றரசர்கள் 12, விஜய நகர அரசர் 3, காகதீய அரசன் பிரதாபருத்திரதேவன் (வடமொழி) 1. ஆக60.

இக்கோயில் 11ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை மிகவும் சிறப்புடன் விளங்கியது. இங்கு மடங்கள் பல இருந்தன. பூந்தோட்டங்கள் பல இருந்தன. பற்பல சிறப்பு விழாக்கள் நடைபெற்றன. கோயிலுக்கு நன்கொடையாகப் பலர் நிலங்களைத் தானமாக தந்தனர். விளக்கெரிக்கப் பலர் பொற்க்காசுகளைத் தானமாகத் தந்தனர். பலர் ஆடு மாடுகளை தந்தனர்.

இறைவனின் செப்புத் திருமேனிகளையும் செய்து பலர் பூசிக்க அளித்துள்ளனர். பொற்காசுகளையும், வெள்ளிக் காசுகளையும் அள்ளித் தந்து பலர் இறைவழிபாட்டைச் சிறப்புடன் நடத்தியுள்ளனர்.

இக்கோயில் நீள சதுர அமைப்புடையது. கோயில் மதிர் சுவர் கிழக்கு மேற்கில் 506 அடியும் தெற்கு வடக்கில் 550 அடியும் உடையது.

நடராஜர் சந்நிதி, முருகன் சந்நிதி. அம்மன் சந்நிதி தனித்தனியே அமைந்துள்ளன.

இறைவன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார். (உமையம்மை இறைவனுக்கு வலப்பக்கத்தில் கோயில் கொண்டுள்ளார்)

இங்குள்ள நந்தவனங்கள் பல. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. 3. அவை 1 . பக்தர் சித்தத்து உறைவான் திருநந்தவனம் 2. ஐம்பத்தெழுவர் திருநந்தவனம் 3. ஆலால் சுந்தரன் திரு நந்தவனம் இங்கு சிறப்புடன் விளங்கிய மடங்கள் –3. அவை 1. தன் மதாவளன் திருமடம் 2. கண்டகோபால மாணிக்கமடம் 3. அன்பர்க்கு அடியார் மடம். இவற்றுள் முதல் மடம் சிவாசாரியார்கள் மடம். இரண்டாவது அடியார்களை உண்பிக்கவும் நந்தவனத்தைப் பாதுகாக்கவும் அமைந்தது. மூன்றாவது ஆண்டார்கள் என்பவர் இருந்தனர். இவர்கள் மலர் பறித்தல், கோயிலைத் தூய்மை செய்தல் போன்ற பணிகளைச் செய்வதோடு கோயிலில் உள்ள கோஷ்டி மண்டபத்தில் தினமும் கூடி திருமுறைகள் ஓதி வந்தனர்.


ஊரின் பெயர் : அமிர்தபுரி திருப்பாற்றுறை

இறைவனின் திருப்பெயர்கள்: பாலைவனநாதர்,
திருப்பாலீசர், அமிர்தேஸ்வரர்,
பாலைவனமுடையார்
என்பனவாகும்.

அம்பாளின் பெயர்கள் : உலகமாதேவி,
லோகநாயகி என்றும் பிரியாத
நாச்சியார் லோகாம்பிகை
என்பனவாகும்.

தீர்த்தம் : அமிர்தபுஷ்கரணி

தலவிருட்சம் : பாலை மரம்.



# சிறப்பு பூஜைகள்

தற்போது இத்திருக்கோயிலில் ஒவ்வொரு மாதமும் பையூர் கோட்ட வேளாள மரபினர்களால் பௌர்ணமி தினத்தன்று சிறப்பு பூஜையும், கிரிவலம் நடைபெறுகிறது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர்.


மேலும் பிரதோஷ தினங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. ஆடிமாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் லோகம்பிகை தாயார்க்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு சுமங்களிகளுக்கு மாங்கல்யம், மஞ்சள் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் விசேஷ தினமாக பங்குனி உத்திர திருவிழா, தெப்போற்ச்சவம் நடைபெற்று வருகிறது.

பக்தர்கள் அனைவரும் வருகைதந்து அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



# ரூட் மேப்




அச்சிட்டோர்: T.L.S.பிரிண்டர்ஸ், பொன்னேரி. ✆: 274228